1981 மார்ச் 21]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் அவ்வப்போது தனியார் பள்ளிகளுக்கும் பொருந்தும் வகையிலே எல்லா ஆணைகளையும் அனுப்பியிருந்தால், இதற்காக தனியாக 'கிளாரிபிகேஷன்' கொடுக்க வேண்டிய அவசியம் இருக்காது. வருங்காலத்திலாவது அந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அத்தகைய யோசனை அரசுக்கு இருக்கிறது.

பிறமொழி ஆசிரியர்கள்.

* 140 வினா.—திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்மொழி அல்லாத அரபி மற்றும் இதர மொழிகளில் முதுகலைத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்கு, கடந்த சில ஆண்டுகளாக ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன ?

(உ) அந்த ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) அப்படிப்பட்ட கோரிக்கைகள் எதும் பெறப்படவில்லை.

(இ) எழாது.

(உ) எழாது.

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TAMILNADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Low Income Group Houses

* 141 *Q.*—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Labour be pleased to state the number of taluks in each district, wherein the Tamil Nadu Housing Board has taken up the construction of Low-Income Group Houses?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : விவர அறிக்கை @ மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 57 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1981 மார்ச் 21

திரு. க. இராமமூர்த்தி : நகராட்சி மன்றங்களாகவும் அதே சமயத்தில் வட்டத் தலைநகராகவும் உள்ள நகரங்களில் குறைந்த வருவாய்த் தொகுதியினருக்காக வீட்டு வசதித் திட்டத்தை அமுல்படுத்த அரசு முன்வருமா ? அங்கே இருக்கின்ற பொருளாதார நிலைமைகளின் காரணமாக அவர்களுக்கு இந்த வசதிகள் கிடைக்கின்ற அளவிலே வீட்டு வசதி வாரியம் செயல்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இப்போது அப்படிப்பட்ட யோசனை இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற புள்ளிவிவரத்தின்படி குறைந்த வருவாய்த் தொகுதியினருக்காக வீட்டு வசதி செய்து தரும் திட்டம் குறைந்த அளவிலேதான் இருக்கிறது. அரசின் எந்தக் கொள்கையின் அடிப்படையிலே இத்திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நிதி ஆதாரம், டிமாண்ட், அந்த ஏரியாவில் எத்தனை பேர் முன்வருவார்கள் என்பதையெல்லாம் முன்னதாகப் பரிசீலனை செய்து அந்த அடிப்படையிலே வீடுகள் கட்டப்படுகின்றன.

திரு. ப. மாணிக்கம்: வீட்டு வசதி வாரியம், குறைந்தபட்ச வருமானம் நிர்ணயிப்பதில் இடத்திற்கு இடம் மாறுபடுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாதம் ரூபாய் 351-ல் இருந்து 600 வரை வருமானம் பெறுபவர்கள் 'லோ இன்கம் குரூப்'.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வெள்ளாற்றின் கரை அரிப்பு.

* 142 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிதம்பரம்-சேத்தியாத்தோப்பு சாலையில் ஒரத்தூர் அருகே வெள்ளாற்றினால் கரை அரிப்பு ஏற்பட்டு சாலையின் பாதுகாப்புக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது குறித்து அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அது குறித்து மேற்கொண்ட தடுப்பு நடவடிக்கைகள் யாவை ?